டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 26.11.2025 புதன்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 130 - Madurai | Online Edition

# நாளை கனமழைக்கு வாய்ப்பு!

சென்னை, நவ.25

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், குமரிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் நிலவிய வளிமண்டல கீழடுக்கு சுழற்சியின் காரணமாக, நேற்று காலை 5.30 மணி அளவில் குமரிகடல் மற்றும் அதனை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல் இலங்கை பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதியாக உருவாகி, காலை 8.30 மணி அளவில், தென் மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய தெற்கு இலங்கை இந்திய பெருங்ககடல் பகுதிகளில் நிலவியது. இது வடக்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுப்பெற்று அடுத்த 24 மணி நேரத்தில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மேலும் வலுப்பெறக்கூடும்.

இதன் காரணமாக நாளை (26ம் தேதி) தென்தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், வடதமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், பலத்த தரை காற்று மணிக்கு 30 முதல் 40 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும். கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங் களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.



# திப்பம்பட்டி கிராம வேளாண் முன்னேற்றக் குழுவிற்கு ராபி பருவம் பயிற்சி!



சேலம், நவ.25

சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டாரம் வேளாண்மைத் துறை மூலம் செயல்படும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ATMA) திட்டத்தின் கீழ் ராபி பருவத்திற்கான பயிர் சாகுபடி பயிற்சி நடைபெற்றது.

பயிற்சியில் சாகுல் அமீத், வேளாண்மை உதவி இயக்குநர், பனமரத்துப்பட்டி தலைமை வகித்து வேளாண்மைத் துறை திட்டங்கள் மற்றும் மானியங்கள் குறித்து, கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் பற்றியும் ராபி பருவ பயிர் சாகுபடி தொழில்நுட்பம் பற்றியும் நெல் பயிரியில் பூச்சி நோய் மேலாண்மை குறித்தும் சிறுதானியம் சாகுபடி தொழில் நுட்பம், அங்கக வேளாண்மை மூலம் பயிர் சாகுபடி தொழில் நுட்பங்கள் பற்றி பயிற்சி அளித்தார்.

பயிற்சியில் சின்னதுரை, உதவி வேளாண்மை அலுவலர் (பொ) கலந்து கார்த்திகை பட்டத்தில் நிலக்கடலை சாகுபடி தொழில்நுட்பம் பற்றியும் உயிர் உரங்கள் கொண்டு விதை நேர்த்தி செய்யவும் விவசாயிகளுக்கு கூறப்பட்டது. சுமித்ரா, வட்டார தொழில்நுட்ப மேலாளர், கலந்து கொண்டு அட்மா திட்டம் பற்றி எடுத்துக் கூறினார். மேலும் பயிற்சியில் செந்தில்குமார், தோட்டக்கலை உதவி அலுவலர் கலந்து கொண்டு தோட்டக்கலை துறை மூலம் செயல்படும் திட்டங்கள் மானியங்கள் குறித்து விளக்கம் அளித்தார். சுதிர், உதவி வேளாண்மை அலுவலர் வேளாண் வணிகத் துறை மூலம் செயல் படும் திட்டங்கள் மானியங்கள் குறித்து விளக்கமளித்தார். இறுதியில் உதவி தொழில்நுட்ப மேலாளர் ரேணுகா நன்றியுரை கூறினார்.

பயிற்சியில் கலந்து கொண்ட அனைத்து விவசாயிகளுக்கும் முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காக்கும் திட்டத்தின் கீழ் வேப்பங்கன்று வழங்கப்பட்டது. பயிற்சியில் 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# சம்பா நெல் பயிர் காப்பீடு செய்ய 30ம் தேதி கடைசி நாள்

## வேளாண்மை உதவி இயக்குநர் தகவல்

புதுக்கோட்டை, நவ.25

சம்பா நெல் பயிர் காப்பீடு செய்ய இன்னும் ஓரிரு நாட்களே உள்ள நிலையில் சம்பா நெல்லுக்கு ஏக்கருக்கு ரூ.540 காப்பீட்டு கட்டணம் செலுத்தி இழப்பீடு தவிர்க்கலாம் என்று வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் கந்தர்வகோட்டை வட்டாரத்தில் நடப்பு 2025-2026 ஆம் ஆண்டிற்கு சம்பா நெற்பயிருக்கு ஏக்கருக்கு நிர்ணயிக்கப்பட்ட ரூ.36,000 கடன் தொகையில் விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரீமியத் தொகை 1.5 சதவீதம் மட்டுமே. அதன்படி ஏக்கருக்கு ரூ.540 காப்பீட்டு கட்டணமாக விவசாயிகள் செலுத்தினால் போதுமானது. இந்த திட்டத்தில் பயிர் கடன் பெறும் விவசாயிகள் அனைவரும் அவர்கள் கடன் பெறும் வங்கிகளில் பயிர் காப்பீட்டு திட்டத்தில் பதிவு செய்து கொள்ளலாம். கடன் பெறாத விவசாயிகள் கந்தர்வகோட்டை வட்டாரத்தில் உள்ள பொது சேவை மையங்கள் மூலமாகவோ, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலமாகவோ பதிவு செய்து கொள்ளலாம்.

நடப்பு சம்பா பருவத்தில் நெற்பயிர் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் இத்திட்டத்தில் பயிர் காப்பீடு செய்ய கடைசி நாள் நவம்பர் மாதம் 30 ந் தேதி ஆகும். இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யும் போது முன்மொழிவு படிவம், பதிவு படிவம், கிராம நிர்வாக அலுவலர் வழங்கும் 1435ம் பசலிக்கான நெல் சம்பா சாகுபடி அடங்கல், வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல், ஆதார் அட்டை நகல் ஆகியவற்றை இணைத்து பிரீமியத் தொகையுடன் தொடர்புடைய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலோ அல்லது பொது சேவை மையங்களிலோ காப்பீடு செய்து அதற்குரிய இரசீதை பெற்றுக்கொள்ளலாம் என கந்தர்வகோட்டை, வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) அன்பரசன் தெரிவித்துள்ளார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# திருவண்ணாமலை மாவட்ட இளைஞர்களுக்கான ஓர் அரிய வாய்ப்பு!

திருவண்ணாமலை, நவ.25

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்நெல்லி கிராமத்தில் செயல்பட்டு வரும் வேளாண்மை அறிவியல் மையம், EDII மற்றும் ஹேண்ட் இன் ஹேண்ட் இணைந்து உள்மாவட்ட இளைஞர்களுக்கு விவசாயத்தில் ட்ரோன் பயன்பாடு (Drone Operations in agriculture) என்ற தலைப்பில் திறன் மேம்பாட்டிற் கான மூன்று நாள் பயிற்சி 8.12.25 முதல் 10.12.25 வரை நடைபெற உள்ளது. இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி பயிற்சியில் கலந்து கொள்ள வேண்டுகிறோம்.

குறிப்பு : முதலில் பதிவு செய்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப் படும்.

வயது வரம்பு : 18 முதல் 40 வரை. பதிவு கட்டணம் : ரூ.250/-.

பயிற்சியில் கலந்து கொள்பவருக்கு பயிற்சி உபகரணங்கள், உணவு மற்றும் தங்கும் வசதி வழங்கப்படும்.

பயிற்சிக்கு பதிவு செய்ய சௌத்திரி 95666 77671 அழைக்கவும்.

# இப்கோ சங்கட ஹரன் பீமா யோஜனா - ஒரு பார்வை

சென்னை, நவ.25

இப்கோ சங்கட ஹரன் பீமா யோஜனா மூலம் விவசாயிகள் இலவச விபத்துக் காப்பீடு பெறும் திட்டத்தை அறிமுகப் படுத்தியுள்ளது. இத்திட் டத்தின் கீழ் இப்கோ நானோ உரங்கள் (நானோ யூரியா, நானோ டிஏபி) மற்றும் இப்கோ யூரியா, டிஏபி, காம்ப்ளக்ஸ் உரங்களுடன் விவ சாயிகள் இலவச விபத்துக் காப்பீடு பெறலாம். ஒரு பாட்டில் நானோ உரம் வாங்கினால் ரூ.10,000 காப்பீடு. அதிகபட்சம் ரூ.2 லட்சம் வரை காப்பீடு பெறலாம் (ஒரு வருடத்திற்கு 20 பாட்டில் நானோ உரம் வரை காப்பீடு பெறலாம்).



அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily





**அன்புடையீர்,**

நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.

இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

தொடர்புக்கு
*+91 80563 05483*
*+91 9344811812*

நன்றி

# மதுக்கூர் வட்டாரத்தில் வேளாண் திட்ட பணிகளை ஆய்வு செய்த வேளாண் துணை இயக்குனர்



தஞ்சாவூர், நவ.25

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரின் அறிவுரைப்படி மதுக்கூர் வட்டாரத்தில் வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தில் வட்டார அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வாட்டாகுடி மதுக்கூர் வடக்கு மோகூர் கருப்பூர் மற்றும் ஆலம்பள்ளம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டு தங்கள் கோரிக்கைகளை பதிவு செய்தனர். இக்கூட்டத்தில் கலந்து கொண்ட தஞ்சை மாவட்ட வேளாண் துணை இயக்குனர், உழவர் பயிற்சி நிலையம், அய்யம்பெருமாள், சம்பா நெல் பயிரில் மழைக்கால மேலாண்மை மற்றும் பி எம் கிசான் திட்டம் குறித்து விவசாயிகளுக்கு தெளிவாக எடுத்துக் கூறினார்.

மதுக்கூர் வட்டாரத்தில் அட்மா திட்டத்தின் கீழ் அசோலா தொட்டிகள் மற்றும் காட்டுப் பன்றிகள் விரட்டும் மருந்து கிட் இரண்டு எண்கள் வரப்பெற்றது.

இதற்கான விவசாயிகள் முன்னுரிமை அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு வேளாண் துணை இயக்குனர் அய்யம்பெருமாள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. மேலும் மதுக்கூர் வட்டாரத்தில் நவம்பர் மாதம் பெய்த மழையினால் மூழ்கியுள்ள நெல் பயிர்கள் உள்ள மோகூர் உலயகுன்னம் பெரியகோட்டை சொக்கனாவூர் புளியங்குடி ஆகிய கிராமங்களில் வேளாண்மை துணை இயக்குனர் நேரடியாக ஆய்வு செய்து மழைக்காலத்தில் செய்ய வேண்டிய பயிர் மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு எடுத்துக்கூறினார். பிஎம்கிசான் திட்டத்தின் கீழ் புதிதாக பதிவு செய்துள்ள விவசாயிகளின் ஆவணங்கள் நேரடியாக விவசாயி களிடம் ஆய்வு செய்யப்பட்டு பிஎம் கிசான் உதவி தொகைக்கான தகுதியினை ஆய்வு செய்தார்.

பின் தளிக்கோட்டை கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள நெல் அணுசரணை ஆராய்ச்சி திடல் வயலினை ஆய்வு செய்து ரகம் வாரியாக நெல் பயிரின் காணப்படும் வேறுபாடுகளை துணை வேளாண்மை அலுவலர் அன்புமணி பதிவு செய்திட அறிவுறுத் தினார். வேளாண் உதவி அலுவலர்கள் பூமிநாதன் ஜெரால்டு சுரேஷ் தினேஷ் ராமு ம ஆகியோர் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர். அட்மா திட்ட அலுவலர்கள் அய்யாமணி மற்றும் ராஜு செயல் விளக்கத்துக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர். வேளாண் உதவி இயக்குனர் மதுக்கூர் வேளாண் அலுவலர் சரவணன் திட்டத்துக்கான ஆய்வின் போது உடனிருந்தனர்.




# மக்காச்சோளம் சாகுபடியில் வளர்ச்சி பருவத்தில் ராணுவ படைப்புழு தாக்குதல்

## ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை கடைபிடிக்க ஆலோசனை

சேலம், நவ.25

சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்டாரத்தில் மக்காச்சோளம் சாகுபடியில் வளர்ச்சி பருவத்தில் ராணுவ படைப்புழு தாக்குதல் பொருளாதார சேத நிலைக்கு குறைவாக ஒரு சில இடங்களில் காணப்படுகிறது. இதனை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை கடைபிடிக்க விவசாயிகளுக்கு வட்டார வாழப்பாடி வேளாண்மை உதவி இயக்குநர் கண்ணன் ஆலோசனை கூறியுள்ளார்.

மக்காச்சோளப் பயிரை வயல்களில் விதைக்கும் போது, வயலைச் சுற்றிலும் வரப்பு பயிராக 2-3 வரிசை தட்டைப்பயறு, சூரியகாந்தி,எள், துவரை போன்ற மஞ்சள் வண்ணம் பூ பூக்கும் பயிர்கள் ஏதேனும் ஒன்றை விதைக்க வேண்டும். மேலும், ஊடுபயிராக உளுந்து, பாசிப்பயறு சாகுபடி செய்ய வேண்டும். பயிர் விதைத்த ஒரு வாரத்திலிருந்து வயல் முழுவதும் கண் காணித்து இலையின் அடிப்பாகத்தில் காணப்படும் படைப் புழுவின் முட்டை குவியல்கள் மற்றும் இளம்புழுக்களை கையால் சேகரித்து அழிக்க வேண்டும்.

தாய் அந்துப்பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்க பயிர் விதைத்தவுடன் ஒரு ஏக்கருக்கு 5-20 எண்ணிக்கையில் இனக்கவர்ச்சி பொறிகள் அமைக்க வேண்டும். விதைப்பிற்கு பின் மக்காச்சோளப் பயிரில் முன்குருத்து பருவத்தில் (விதைப்பு செய்து 15-20 நாட்கள்) படைப்புழுவின் தாக்குதல் தென்பட்டால், அசாடிராக்டின் 1.0 சதவீதம் 2.0 மி.லி. அல்லது குளோராண்டி ரணிலிப்ரோல் 18.5 எஸ்.ஜி., 0.4 மி.லி., அல்லது புளூபெண்டி மைடு 20 டபிள்யூ ஜி 0.5 கிராம் ஆகியவற்றில் ஏதேனும் ஒரு பூச்சிக்கொல்லியை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து வயலில் தெளித்து புழுக்களை கட்டுப்படுத்தலாம். படைப்புழு தாக்குதல் இளம் குருத்து பருவமான, 30-35 நாட்களில் பயிரில் இருந் தால், மெட்டாரைசியம் அனிசோப்பிலியே 2.5 கிலோ அல்லது ஸ்பைனிடோரம் 11.7 எஸ்ஜி 0.5 மி.லி., அல்லது இமாமெக்டின் பென்சோயேட் 0.4 கிராம் அல்லது நொவலுரான் 1.5 மி.லி.

ஆகியவற்றில் ஏதேனும் ஒரு பூச்சிக்கொல்லி மருந்தை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். இறுதியாக மேற்கண்ட பருவங்களில் புழுக்கள் கட்டுப்படுத்த முடியாமல் பூக்கும் பருவத்திலும் (விதைத்த 60 நாட்களுக்கு மேல்) தென்பட்டால், குருத்துப் பருவத்தில் தெளிக்காத மருந்துகளில் ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்தி புழுவினை கட்டுப்படுத்தலாம். மக்காச்சோளப் பயிரில் படைப்புழு தாக்குதலைக் கட்டுப்படுத்த பரிந்துரைக்கப்பட்ட பூச்சிக்கொல்லி மருந்துகளை மட்டுமே உரிய அளவில் பயன்படுத்தி குருத்துபகுதியில் தெளித்தல் வேண்டும். இந்த வழிமுறைகளைப் பின்பற்றி மக்காச்சோளப் பயிரில் படைப்புழுவினை கட்டுப்படுத்தி விவசாயிகள் அதிக மகசூல் பெறலாம்.

மேலும் உங்கள் சந்தேகங்களுக்கு வாழப்பாடி வட்டார உதவி வேளாண்மை அலுவலர், துணை வேளாண்மை அலுவலர், வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர் ஆகியோரை தொடர்பு கொண்டு உரிய பயிர் பாதுகாப்பு மருந்துகளை தெளித்து பயிர்களை பாதுகாக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

# நிலக்கடலையில் நுண்ணூட்ட சத்து பற்றாக்குறை மேலாண்மை

**நிலக்கடலையில் திரட்சியான பருப்புகளைப் பெற :**

நிலக்கடலையில் பருப்பின் வளர்ச்சி குறைபாட்டினை தவிர்த்து நல்ல வளர்ச்சி அடைந்த முழுமையான பருப்புகளை பெறுவதற்கு கீழ்க்கண்ட ஊட்டச்சத்துக் கலவையை கலந்து தெளிக்க வேண்டும். இந்த கலவையை தயாரிக்க டி.ஏ.பி 2.5 கிலோ, அம்மோனியம் சல்பேட் 1 கிலோ மற்றும் போராக்ஸ் (வெண்சுரம்) 0.5 கிலோவினை 37 லிட்டர் தண்ணீரில் ஒன்றாக கலந்து ஒரு இரவு முழுவதும் வைத்திருக்க வேண்டும். மறுநாள் காலை அந்த கலவையை வடிகட்டினால் 32 லிட்டர் வரை தெளிந்த ஊட்டச்சத்து நீர் கிடைக்கும். இதனை 468 லிட்டர் தண்ணீருடன் சேர்த்து 500 லிட்டர் அளவில் தயார் செய்ய வேண்டும். இதனுடன் பிளானோபிக்ஸ் 350 மில்லியை இதில் சேர்த்து விதைத்த 25 மற்றும் 35-ம் நாட்களில் தெளிக்க வேண்டும்.

## நிலக்கடலையில் பூக்கள் உதிராமல் தடுக்கும் முறை :

பூக்கள் உதிராமல் தடுத்து, விதை பிடிக்கவும் மற்றும் வறட்சியை தாங்கி வளரும் தன்மையை அதிகப்படுத்தவும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் நிலக்கடலை ரிச் (சுஜஊகூஹி) என்ற வளர்ச்சி ஊக்கியினையும் 50 சத பூக்கள் உருவாகும் தருணத்திலும் விதை உருவாகும் தருணத்திலும் எக்டருக்கு 5.0 கிலோவினை 500 லிட்டர் தண்ணீரில் கலந்து இரண்டு முறை தெளிக்க வேண்டும்.

**துத்தநாக பற்றாக்குறை :** 25 கிலோ சிங்க் சல்பேட்ஃ எக்டர் அடியுரமாக இட வேண்டும்.

**இரும்பு சத்து பற்றாக்குறை :** 1 சத இரும்பு சல்பேட் மற்றும் 0.1 சத சிட்ரிக் அமிலம் கலவையை விதைத்த 30, 40 மற்றும் 50 நாட்களில் இலைவழி தெளிப்பாக தெளிக்க வேண்டும் (அல்லது) 50 கிலோ பெர்ரஸ் சல்பேட்டை 12.5 டன் தொழு உரத்துடன் கலந்து எக்டருக்கு அடியுரமாக இட வேண்டும்.

**போரான் பற்றாக்குறை :** போராக்ஸ் 10 கிலோ அல்லது 0.2 சத போரிக் அமிலத்தை விதைத்த 40 மற்றும் 50-வது நாட்களில் இட வேண்டும்.




நிலக்கடலை சாகுபடியில் அதிக மகசூலைப் பெற தரமான சான்று பெற்ற விதைகளையே பயன்படுத்த வேண்டும்.

மேலும் பயிரிடும் விதையின் தரத்தை அறிய விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இயங்கி வரும் விதைப் பரிசோதனை நிலையத்தில் அனைத்து பயிர்களுக்கான விதைகளையும் பரிசோதனை செய்ய ரூ.80/- மட்டும் செலுத்தி விதைகளின் புறத்தூய்மை, ஈரப்பதம், முளைப்புத்திறன், பிறரக விதை கலப்பு போன்ற காரணிகளை ஆய்வு செய்து ஆய்வு முடிவுகளை பெற்றுக் கொள்ளலாம் என்பதனை விதைப் பரிசோதனை அலுவலர் சிவகாமி, வேளாண்மை அலுவலர்கள் இ.ஜானகி மற்றும் பா.சாய்லெட்சுமி சரண்யா ஆகியோர் கேட்டுக் கொண்டுள்ளனர்.


Rithvik Pipe
25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன்
கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்
தரச் சான்றிதழ் பேப்பரில் மட்டுமல்ல பைப்பிலும்
பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்
25 ஆண்டுகள் உத்தரவாதம்
நம்பிக்கைக்கு அடையாளம்
100% LEAD-FREE பைப்புகள்
ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
ISI சான்று பெற்ற பைப்புகள்
தரத்திற்க்கு ஒரே அடையாளம்
ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
67 GRADE மூலப்பொருட்கள்
அதிக வலிமை, நீண்ட ஆயுள்
TEST CERTIFICATE – QR CODE மூலமாக
ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
FREE ON-SITE TESTING
விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
சரியான எடை, தடிமன்
ஏமாற்றமில்லா தயாரிப்பு
PRODUCT RANGES
ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes)
ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80)
ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy)
ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG)
ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm
PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK
RITHVIK PIPES PROUDLY TRUSTED BY
LMW
isha
Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com
POWERGRID
BHEL
Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com
For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# முட்டை விலை எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது. தெரியுமா?

இந்தியாவில் ஆண்டு தோறும் 14,200 கோடி முட்டைகள் உற்பத்தி செய்து உலகிலேயே இரண்டாவது முட்டை உற்பத்தி செய்யும் நாடாக உள்ளது. இதில் குறிப்பாக தமிழகத்தை சேர்ந்த நாமக்கல் பகுதி முட்டை ஏற்றுமதியில் 85-90% முக்கிய பங்காற்றுகிறது என்பது குறிப்பிடத் தக்கது. இந்நிலையில் முட்டை விலை எப்போதும் இல்லாத அளவுக்கு வரலாற்றிலேயே முதல் முறையாக 6.10 ரூபாயாக உயர்ந்துள்ளது. இது கடைக்கோடிக்கு வரும் விற்பனைக்கு வரும் போது என்ன விலை இருக்கும் என்பதை உங்களுடைய யுகத்திற்கு விட்டு விடுகிறேன். சரியா.

**முட்டை விலை எப்படி நிர்ணயிக்கப்படுகிறது தெரியுமா?**

முட்டை விலையை நிர்ணயிக்க (NATIONAL EGG CO-ORDINATION COMMITTE) N.E.C.C தேசிய முட்டை ஒருங் கிணைப்பு கமிட்டியானது 1982யில் வெக்கில்ஸ் நிறுவனர் டாக்டர் P.V.ராவ் இந்த அமைப்பை ஏற்படுத்தி முட்டை உற்பத்தியாளர்களுக்கு சரியான விலையும் நுகர்வோரின் நலனுக்கு கட்டுபடியான விலை நிர்ணயிக்கப்பட்டு விலை அறிவிப்பாக செய்து வருகிறது.

**இது அரசு அமைப்பா?**

இது ஒரு அரசு அமைப்பு அல்ல, விவசாயிகள் சார்ந்த கூட்டுறவு போன்ற அமைப்பு தான். நாடு முழுவதும் முட்டை உற்பத்தி யாளர்களை ஒருங்கிணைத்து முட்டை விலை விழ்ச்சியை தடுக்க இந்த என்.இ.சி.சி உதவுகிறது. இதில் தற்போது 35000க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர்.

**விலை எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது தெரியுமா?**

பகுதி வாரியான குழுக்கள், தினசரி தேவைகள், செலவு, தீவனச் செலவு, மின்சாரம், தொழிலாளர்களின் செலவு போன்றவற்றை கணக்கிட்டு அதற்கேற்ப முட்டை விலையை நிர்ணயிக்கப்படுகிறது. ஆனால் தேசிய முட்டை ஒருங்கிணைப்பு அமைப்பு சட்ட பூர்வ மான அதிகாரமில்லை. விலை அறிவிப்பை ஆலோசனையாக மட்டும் சொல்லும். இது கட்டாயமானதல்ல. ஆனால் 35000க்கும் மேற்பட்ட கோழி முட்டை உற்பத்தியாளர்கள் இந்த ஒரே தளத்தை பின் பற்றுவதால், அதே விலையை சந்தை விலையாக (MARKET PRICE) பின்பற்றப்படுகிறது.

**என்.இ.சி.சி யால் என்ன பலன்கள்?**

1) நியாயமான விலை முட்டை உற்பத்தியாளர்களுக்கு
2) நுகர்வோருக்கு முட்டை பயன்பாட்டை அதிகரித்தல்
3) விலையை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கு.

**முட்டை விலை உயர்வுக்கு என்ன காரணம் (தற்போது)**

1) தீவனச்செலவு அதிகரித்தல்
2) குளிர்காலங்களில் முட்டை உற்பத்தி பாதிப்பு
3) முட்டையின் பயன்பாடு பிற உணவு பண்டங்களில் அதிகரித்தல் (கேக் உற்பத்தி)
4) முட்டையில் புரத சத்து (5-6 கிராம்) இருப்பதால் பயன்பாடு அதிகம்
5) வரத்து குறைவு

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்குதல் மற்றும் புற ஒட்டுண்ணி நீக்குதல்



விருதுநகர், நவ.25

விருதுநகர் வட்டாரம் விரிவாக்க சீரமைப்பு திட்டம் 2025-26 முதல் தவணை நிதியின் கீழ் வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்குதல் மற்றும் புற ஒட்டுன்னி நீக்குதல் என்ற தலைப்பில் தாதம்பட்டி வருவாய் கிராமத்தில் கமிலஸ் சி லீமாரோஸ் வேளாண்மை உதவி இயக்குநர், விருதுநகர், தலைமையில் செயல் விளக்கத்திடல் நடைபெற்றது. தாதம்பட்டி கால்நடை உதவி மருத்துவர் மஞ்சுளா, குடற்புழு நீக்குதல் மற்றும் புற ஒட்டுண்ணி நீக்குதல் குறித்து கால்நடை விவசாயிகளுக்கு செயல் விளக்கம் செய்து காண்பித்து ஆடு வளர்ப்பில் தீவன மேலாண்மை குறித்து விரிவாக எடுத்துரைத்தார். இதில் தாதம்பட்டி மற்றும் சின்ன தாதம்பட்டி கால்நடை வளர்க்கும் விவசாயிகள் தங்கள் ஆடுகளுக்கு குடற்புழு மருந்து கொடுத்து பயனடைந்தனர். செயல்விளக்கத் திடலுக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் இராஜேஸ் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் கார்த்திகா ஆகியோர் செய்திருந்தினர்.

# கார்த்திகை பட்ட நிலக்கடலை சாகுபடியில் அதிக விளைச்சல் பெற விதைப்பரிசோதனை செய்வது அவசியம்!

இராமாநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கமுதி, கடலாடி, உச்சிப்புளி மற்றும் திருப்புல்லாணி வட்டாரங்களில் கார்த்திகை மற்றும் மார்கழி பட்டத்தில் பெருமளவில் நிலக்கடலை பயிர் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகள் அதிக விளைச்சல் பெற தரமான விதைகளை தேர்வு செய்து விதைப்புக்குப் பயன்படுத்த வேண்டும். தற்பொழுது கதிரி-1812, தரணி, ஜிஜெஜி-32, விஆர்ஐ-9, விஆர்ஐ- 10, ஆகிய நிலக்கடலை இரகங்கள் பரவலாக சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

இவற்றில் ஏதாவது ஒரு ரகத்தினை தேர்வு செய்து திடமான விதைகளை ஏக்கருக்கு 50 முதல் 55 கிலோ என்ற அளவில் 30 செ.மீ வீதம் வரிசைக்கு வரிசை மற்றும் செடிக்கு செடி 10 செ.மீ இடைவெளியில் விதைகளை விதைப்பு செய்ய வேண்டும்.

நிலக்கடலை ஏக்கருக்கு 7:14:21 என்ற விகிதத்தில் தழை, மணி, சாம்பல் சத்து இடவேண்டும். நிலக்கடலையில் உற்பத்தியினை அதிகரித்து திரட்சியான காய்களை பெற ஏக்கருக்கு 400 கிலோ ஜிப்சத்தை அதாவது 200 கிலோ ஜிப்சத்தை அடியுரமாக விதைப்பதற்கு முன்னரும் மீதமுள்ள 200 கிலோவைப் பயிர் பூக்கத்தொடங்கும் போது அதாவது விதைத்த 30-40 நாட் களுக்குள் மழை வந்தவுடன் மேலுரமாக இட்டு மண் அணைக்க வேண்டும்.

மேலும் தற்பொழுது வடகிழக்குப் பருவமழை பெய்து வருவ தால் நிலக்கடலை சாகுபடி செய்திடும் விவசாயிகள் முன்கூட்டியே விதைப்பரிசோதனை செய்து விதையின் தரம் அறிந்து கொள்ள லாம். விதையின் தர நிர்ணயக் காரணிகளான முளைப்புத் திறன், புறத்தூய்மை, பிறரக விதைக்கலப்பு மற்றும் ஈரப்பதம் ஆகியற்றை பரிசோதனை செய்த பின்னரே விதைப்புக்கு பயன்படுத்த வேண்டும்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

தரமான நிலக்கடலை விதை என்பது குறைந்தபட்சம் 70 சதவீதம் முளைப்புத்திறனும், அதிகபட்சமாக 9 சதவீதம் ஈரப்பதமும், குறைந்த பட்சமாக 96 சதவீதம் புறத்தூய்மையும் இருத்தல் அவசியம். ஆகவே நிலக்கடலை விவசாயிகள் விதைப்பதற்கு முன்பு பரமக்குடி ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில் இயங்கி வரும் பரமக்குடி விதைப்பரிசோதனை நிலையத்தில் ரூ.80/- கட்டணமாக செலுத்தி விதைகளை பரிசோதனை செய்து கொள்ளுமாறு விதைப்பரிசோதனை அலுவலர் சி.சிவகாமி மற்றும் வேளாண்மை அலுவலர் ச.முருகேஷ்வரி ஆகியோர் கேட்டுக்கொண்டனர்.



# விதைப்பண்ணை நெற்பயிரில் பாசிகளால் ஏற்படும் பாதிப்புகளை கட்டுப்படுத்துதல்



திருச்சி, நவ.25

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் சம்பா பருவத்தில் நெல் சாகுபடி தீவிர மாக நடைபெற்று வருகிறது. விதைப் பண்ணை அமைக்கப்பட்டுள்ள நெற்பயிரில் பாசிகளால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், அவற்றைக் கட்டுப்படுத்துவது குறித்தும் திருச்சிராப்பள்ளி மாவட்ட விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் பா.நளினி கூறியிருப்பதாவது,

பாசிகள் என்பது பச்சையம் கொண்ட எளிமையான ஆரம்ப நிலைத் தற்சார்புடைய தாவரங்கள் ஆகும். இப்பாசிகள் நெல் வயலில் படர்ந்து வளர்வதால் நெற்பயிருக்குத் தேவையான காற்றோட்டம் தடைப்பட்டுப் பயிரின் வளர்ச்சி குன்றிக் காணப்படும். நாற்றாங்கால், நேரடி நெல் விதைப்பு மற்றும் நடவு வயல்களில், குறிப்பாகக் களர் மற்றும் உவர் நிலங்களில் அடியுரமாகப் பாஸ்பேட் உரங்களான டி.ஏ.பி. கலப்பு உரம் மற்றும் சூப்பர் பாஸ்பேட் அதிகம் பயன்படுத்தப்படுவதால் பாசிகள் பெருக்கமடைந்து அதன் மூலம் ஹைட்ரஜன் சல்பைடு வாயு வெளியேறுவதனால் நாற்றுகள் கருகும் நிலை ஏற்படுகிறது.

நெல் வயலில் பாசிகள் ஆரம்ப நிலையில் இருந்தால் கோனோ வீடரை பயன்படுத்தி அவற்றை அழுத்தி மண்ணோடு மூடிய பின்னர் ஜிங்க் சல்பேட் (மயில் துத்தம்) 2.5 கிலோ / எக்டர் அல்லது அதிகளவில் பாசிகள் இருந்தால் காப்பர் சல்பேட் 5 கிலோ/எக்டர் என்றளவில் இடுவதன் மூலம் பாதிப்புகளைக் குறைக்கலாம்.

மேலும், வயலில் நீரை வடிகட்டிய பிறகு 0.5 சதவிகிதம் ஜிங்க் சல்பேட் (மயில் துத்தம்) கரைசலை (5 கிராம் என்ற அளவில் 1 லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளிக்க வேண்டும். பிறகு பாசிகள் தென் பட்டால் 10 முதல் 15 நாட்கள் இடைவெளியில் மேலும் ஒரு முறை தெளித்து நெற்பயிரைப் பாசியின் பாதிப்பிலிருந்து பாதுகாக்கலாம். ஆய்வின் படிப் பாசிகள் உவர் மண்ணில் தான் அதிகம் பெருகும் என்றும். அவற்றைச் சரிசெய்யக் காப்பர் சல்பேட் இட பரிந்துரைக்கப் படுகிறது. உப்புத் தன்மை உள்ள ஆழ்துளை கிணறு நீர் மற்றும் கிணற்று நீரைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். ஆற்றுத் தண்ணீரைப் பயன்படுத்துவது நல்லது.

நுண்ணுயிர் உரங்களை இடுதல் மற்றும் பயிர்ச் சுழற்சி செய்வதன் மூலமும் நெல் நடவு வயல்களில் வளரும் பாசிகளினால் ஏற்படும் விளைச்சல் மற்றும் வருவாய் இழப்பைக் குறைக்கலாம்.

ஒவ்வொரு ஐந்து அல்லது ஏழு நாட்களுக்கு ஒரு முறை திறன்மிகு நுண்ணுயிரிக் கரைசலை 2 லிட்டர் என்றளவில் 200 லிட்டர் தண்ணீரில் பாசனத்துடன் கலந்து கொடுக்கலாம்.

ஒரு லிட்டர் துத்தநாகம் கரைக்கும் பாக்டீரியாவை 200 லிட்டர் நீருடன் கலந்து அளிக்கலாம்.

மாலை வேளையில் மட்டும் நீர்ப்பாசனம் செய்ய 2 செ.மீ. அளவுக்கு மட்டும் தண்ணீர் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். அதிகம் தண்ணீர் பாய்ச்சுவது உப்பு அளவு பெருக்கத் திற்கும், அதன் மூலம் பாசிகள் பல்கி பெருகுவதற்கும் வாய்ப்பாக அமையும். நிலத்தின் ஈரம் குறைவதை உன்னிப்பாகக் கவனித்து நிலத்தைக் காயவிடாமல், தேவைக்கேற்ப மீண்டும் தண்ணீர்ப் பாய்ச்ச வேண்டும்.

மேற்காணும் முறைகளைக் கடைபிடித்து பாசிகளால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைத்து விதைப்பண்ணை நெல் வயல்களில் விளைச்சலை அதிகரிக்கலாம்.

# கள்ளக்குறிச்சி வெள்ளமலை பழங்குடி விவசாயிகளுக்கு மேம்பட்ட மிளகு சாகுபடி பயிற்சி

கள்ளக்குறிச்சி, நவ.25

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள வெள்ளமலைப் பகுதிப் பழங்குடி விவசாயிகளுக்கு, மேம்பட்ட கருமிளகு சாகுபடி நுட்பங்கள் குறித்த சிறப்புப் பயிற்சி முகாம் நேற்று (25.11.25) வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் (ICAR) கீழ் செயல்படும் இந்திய நறுமணப் பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனம் (IISR)–இன் பழங்குடியினர் துணைத் திட்டத்தின் (Tribal Sub Plan - TSP) நிதியுதவியின் கீழ் இந்தப் பயிற்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கள்ளக்குறிச்சி மாவட்ட நிர்வாகம், அண்ணாமலை பல்கலைக் கழகம் மற்றும் விவேகானந்தா அறக்கட்டளை ஆகியவற்றின் கூட்டு முயற்சியில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

கல்வராயன் மலைகளின் வெள்ளமலைப் பகுதியில் வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறைகளில் பழங்குடி விவசாயிகளின் வலுவூட்டலுக்கான சிறப்பு முயற்சிகளுக்கு வலுசேர்க்கும் வகையில் இந்தப் பயிற்சி நடைபெற்றது.

கல்வராயன் மலைப் பகுதியில் பல அடுக்கு சாகுபடி முறை (multi-tier cropping system) பிரபலமடைந்து வரும் இந்தக் காலகட்டத்தில், மிளகு ஒரு அதிக மதிப்புள்ள தோட்டக்கலைப் பயிராகவும் மற்றும் இந்தப் பல அடுக்கு சாகுபடி முறையில் ஒரு முக்கிய அங்கமாகவும் உள்ளது என விஞ்ஞானிகள் வலியுறுத்தினர்.

தற்போது குறைந்த லாபம் மற்றும் குறைவான பண்ணைத் தொழிலாளர் வேலைவாய்ப்பை மட்டுமே அளிக்கும் மரவள்ளிக் கிழங்கு ஒற்றைச் சாகுபடி முறைக்கு ஒரு சிறந்த மாற்றாக மிளகு சாகுபடி இருக்கும் என்றும், கல்வராயன் மலை போன்ற பகுதிகளின் பழங்குடி விவசாயிகளுக்கு மிளகு ஒரு திருப்புமுனையாக அமையும் என்றும் வல்லுநர்கள் கருத்து தெரிவித்தனர்.

IISR விஞ்ஞானிகளான டாக்டர் பிஜு மற்றும் டாக்டர் செல்லப் பெருமாள், அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர் எஸ்.இரமேஷ்குமார் மற்றும் விவேகானந்தா அறக்கட்டளையின் டாக்டர் டி.பாலு ஆகியோர் விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தனர். இச்சாகுபடி பயிற்சி அமர்வுகளில், மேம்பட்ட சாகுபடி முறைகள், மிளகுக் கொடிகளைப் படரவிடுதல், கவாத்து செய்தல் மற்றும் நோய் மற்றும் பூச்சி மேலாண்மை போன்ற முக்கியமான அம்சங்கள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டன. நறுமணப் பொருட்கள் வாரியத்தின் தொழில்நுட்ப அலுவலர் மிளகு தரம்பிரித்தல் குறித்தும் மதிப்புமிக்க தகவல்களை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் திரு. சத்தியமூர்த்தி, வெள்ளமலை வட்டார வளர்ச்சி அலுவலர், துணை தோட்டக்கலை அலுவலர் மற்றும் மாவட்டத்தின் ஆஸ்பிரேனல் பிளாக் ஃபெலோ ஆகியோர் கலந்து கொண்டனர்.

பயிற்சியின் நிறைவில், IISR நிறுவனத்தின் TSP நிதியுதவியின் கீழ், 5,000 பன்னியூர்–1 (Panniyur-1) மிளகு நாற்றுகள், ட்ரைக்கோ டெர்மா (Trichoderma) மாத்திரைகள் மற்றும் நுண்ணூட்டச் சத்துக் கலவைகள் ஆகியவை பழங்குடி விவசாயிகளின் விவசாயத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் விநியோகிக்கப்பட்டன.

மாவட்ட நிர்வாகத்தின் இந்த முயற்சி, பழங்குடி மக்களின் விவசாயத் தேவைகளை நேரடியாக நிவர்த்தி செய்கிறது. மேலும், இந்தப் பிராந்தியத்தில் அதிகரித்த வருமானம் மற்றும் நிலையான விவசாய நடைமுறைகளுக்கான ஒரு நம்பிக்கையின் ஒளிக்கீற்றை அளிப்பதாகவும் அமைந்துள்ளது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# இரசாயன உர மானிய முறைகேடுகளைத் தடுக்கும் 'உண்மையான நேர' கண்காணிப்பு Real Time FSMS அமல்

விருதுநகர், நவ.25

விருதுநகர் ஜேப்பி பார்ம் செயல்வழிப் பேராசிரியர் பழனீஸ்வர் வெளியிட்ட செய்தியில் கூறியுள்ளதாவது, டிசம்பர் 1 முதல் இரசாயன உர மானிய முறைகேடுகளைத் தடுக்கும் 'உண்மை யான நேர' கண்காணிப்பு Real Time FSMS (Fertilizer Sales Monitoring System) அமல்படுத்தப்படுகிறது.

வெளிப்படைத்தன்மை மற்றும் கடத்தல் தடுப்புக்கான ஒரு முக்கிய நகர்வு டிசம்பர் 1 முதல், அரசு மானியத்துடன் வழங்கப் படும் உரங்களின் விநியோகம் மற்றும் கடத்தலைத் தடுக்க, மத்திய அரசு ஒரு புதிய நடைமுறையைக் கட்டாயமாக்க உள்ளது. Real Time Fertilizer Sales Monitoring System.

இந்த அமைப்பின்படி, ஒவ்வொரு சில்லறை விற்பனையும் இனி நேரடியாக மத்திய அரசின் iFMS/e - Urvarak Server–ல் பதிவு செய்யப்படும்.

மானியம் பெறும் இரசாயன உர விற்பனை ஏற்கனவே நாடு முழுவதும் PoS (Point of Sale) கருவி மூலம் ஆதார் மற்றும் கைரேகையுடன் இணைக்கப்பட்டு கணினிமயமாக்கப்பட்டுள்ளது. இந்த FSMS–ன் ஆரம்ப கட்ட நடவடிக்கைகளாலேயே பல கோடி ரூபாய் முறைகேடுகள் தடுக்கப்பட்டுள்ளன.

**FSMS முக்கியப் பலன்கள்**

மானிய இரசாயன உரம் உற்பத்தியாகாமலே, அல்லது விவசாயி களைச் சென்றடையாமலே, உற்பத்தியாளர்கள், இறக்குமதி யாளர்கள் மற்றும் மொத்த விற்பனையாளர்கள் கூட்டு சேர்ந்து போலி விற்பனைக் கணக்குகள் தயாரித்து பல்லாயிரக் கணக்கான கோடி ரூபாய் மானியத்தைப் பெற்று வந்த மாபெரும் மோசடி தற்போது பெருமளவில் தடுக்கப்பட்டுள்ளது. தற்போது நடைமுறை படுத்தப்படும் புதிய நடைமுறைப்படி சில்லறை விற்பனை நிலையத்தில் உள்ள PoS ஒருவர் தனது ஆதார் எண்ணை இட்டவுடன், அந்த எண்ணின் கீழ் இதற்கு முன் வாங்கப்பட்ட மொத்த உரத்தின் எண்ணிக்கை மற்றும் வாங்கிய இடத்தின் விவரங்கள் விற்பனையாளருக்குத் தெரிய வரும்.

உதாரணமாக, ஒரே ஆதார் எண்ணில் நூற்றுக்கணக்கான உர மூட்டைகள் விற்கப்பட்ட சந்தேகத்திற்குரிய முந்தைய விற்பனைகள் இந்த FSMS மூலம் எளிதாகக் கண்டறியப்பட்டுள்ளன. இதன் மூலம், மானியத்துடன் வழங்கப்படும் இரசாயன உரம் விவசாய நிலத்திற்குச் செல்லாமல், வேறு இடங்களுக்குக் கடத்தப்படுவதை இம்முறை தடுக்கும். இந்த புதிய FSMS கண்காணிப்பு அமைப்பின் மூலம், மாநிலங்கள் தங்கள் மாவட்டங்களில் உள்ள பயிர் அடிப்படை யிலான உர தேவைகள் (crop-wise fertilizer requirement norms) மற்றும் சாகுபடி பரப்பளவுக்கு ஏற்ப தங்கள் தேவையைச் சரியான அளவில் மதிப்பிட்டு, மத்திய சர்வரில் பதிவேற்றியுள்ளன. கடந்த ஆண்டின் விற்பனைத் தரவை ஆய்வு செய்வதன் மூலம் எந்தக் கடையில், எவ்வளவு விற்பனை ஆனது என்பதையும் எளிதாகக் கண்காணிக்க முடியும்.

வருங்காலத்தில், FSMS அமைப்பானது மண் பரிசோதனை பரிந்துரைகளுடன் இணைக்கப்படும். இது சில்லறை விற்பனை யாளர்களுக்கு ஒரு புதிய பொறுப்பைக் கொடுக்கும். விற்பனை யாளர்கள், உரம் வாங்க வரும் விவசாயி மற்றும் அவரது நிலத்தைப் பற்றிய முழுமையான தகவல்களின் அடிப்படையில் ஆலோ சனைகளை வழங்குவர். விவசாயிகளும் மண் பரிசோதனை சிபாரிசைப் பின்பற்றி, அதிகப்படியான உரப் பயன்பாட்டைத் தவிர்க்க இது வழிவகுக்கும்.

உரக் கடத்தல் மற்றும் மானிய முறைகேட்டைத் தடுப்பதில் இந்த FSMS ஒரு புரட்சிகர மாற்றத்தை ஏற்படுத்தினாலும், ஒரு கேள்வி எழுகிறது.

**பொறுப்பற்ற இரசாயன உர உபயோகத்தினால் சீரழிந்த மண் வளம் மீட்கப்படுமா?**

முறைகேட்டைத் தடுக்கும் அதே வேளையில், மண் பரிசோதனை பரிந்துரைகளை உர விற்பனையுடன் இணைப்பதன் மூலம் மட்டுமே, விவசாயிகள் தேவைக்கு அதிகமாக உரம் இடுவதைத் தவிர்க்கவும், மண் வளத்தை மீட்டெடுக்கவும் முடியும். இந்த ஒருங் கிணைந்த அணுகுமுறை, மண் வளம் மேலும் சீரழிவதைத் தடுக்க உதவும். இம்முயற்சி, மானியப் பணத்தைக் கடத்தலில் இருந்து காப்பதுடன், வருங்காலத்தில் துல்லியமான விவசாயத்தின் (Precision Agriculture) அடிப்படைக் கட்டமைப்பை உருவாக்கவும், ரசாயன உரம் வாங்காது தவிர்த்திடும் இயற்கை விவசாயிகளையும் ஊக்கிவிக்க வழி வகுக்கும் என்பதில் ஐயமில்லை.

தகவல் : **வேளாண் கல்வி ஆலோசகர், கோவில்பட்டி கோ.சுரேஷ் குமார்.**

# துவரையில் பச்சை காய்த்துளைப்பான் அறிகுறிகளும் கட்டுப்பாட்டு முறைகளும்

● இளம் புழுக்கள் இலைகளை உண்ணும்

● பெரிய புழுக்கள் காய்களை துளைத்து உண்ணும்

● புழுக்கள் தலையை மட்டும் காயின் உள்ளே விட்டு, உடலை வெளிப்பக்கம் வைத்திருக்கும்

● காயைச் சுற்றி வட்டவடிவ துளைகள் இருக்கும்

● துவரையின் 9 வரிசைக்கு ஒரு வரிசை சூரியகாந்தியையும், மக்காச்சோளத்தை நிலத்தை சுற்றியும் பயிரிட வேண்டும்

● இனக்கவர்ச்சிப் பொறி ஏக்கருக்கு 5 என்ற எண்ணிக்கையில் வைத்து பூச்சி நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தவும்

● ஏக்கருக்கு 20 பறவைத் தாங்கிகள் என்ற எண்ணிக்கையில் அமைக்கவும்

● வளர்ந்த புழுக்களை சேகரித்து அழிக்கவும்

● பச்சைக் காய்ப்புழு நச்சுயிரியை ஏக்கருக்கு 200 மிலி மற்றும் ஒட்டும் திரவம் 1.0 மிலி/லி. என்ற விகிதத்தில் கலந்து தெளிக்கவும்.

**பின்வரும் பூச்சிக்கொல்லிகளில் ஏதேனும் ஒன்றினை ஏக்கருக்கு தெளிக்கலாம்**

● பேசிலஸ் துரிஞ்சியென்சிஸ் வார் குர்ஸ்டாக் 0.6 கிலோ

● பிவேரியா பாசியானா (1.15 % WP) 1 கிலோ

● அசாடிராக்டின் (0.03%) 400 மி.லி

● கார்டாப்ஹைட்ரோகுளோரைடு (50% SP) 400 கிராம்

● குளோரோட்ரேனிலிபுருள் (18.5% SC) 60 மி.லி

● பிப்ரோனில் (80% WG) 20 கிராம்

● புளூபென்டிமைட் (39.35% SC) 20 மி.லி

● புளூபென்டிமைட் (20% WG) 50 கிராம்

● இமாமேக்ட்டின் பென்சோயேட் (5% SC) 80 மி.லி

● லுபனுரான் (5.4 % EC) 250 மி.லி

இவ்வாறு விவசாயிகள் பயனடையுமாறு தாரமங்கலம் வேளாண்மை துறை மூலம் கேட்டுக்கொள்கிறோம்.

# கார்த்திகை பட்ட நிலக்கடலை மற்றும் எள் சாகுபடியில் அதிக மகசூல் பெற தரமான விதை அவசியம்

நாமக்கல் மாவட்டத்தில் கார்த்திகை பட்டத்திற்கு உகந்த பயிர்கள் நிலக்கடலை மற்றும் எள் ஆகும். கார்த்திகை பட்டம் ஹிலிஸ மிலி ம்ளஉ மாதத்தில் விதைப்பு செய்வதாகும். இப்பட்டத்தில் விதைப்பு செய்வதால் போதிய மழை மற்றும் தட்பவெப்ப நிலை சாதகமாக உள்ளதால் அதிக மகசூல் பெற்று விவசாயிகள் அதிக இலாபம் பெற்று பயனடைலாம்.




எள் மற்றும் நிலக்கடலை சாகுபடிக்கு நிலம் தயாரிக்கும் பொழுது இருமுறை உழவு செய்து மண் கட்டிகள் இல்லாமல் பொலபொலப்பாக புழுதி ஆகும் வரை தயார் செய்து விதைத்தல் அவசியம். நிலக்கடலையில் VRI 9, VRI 10, Girnar 4, Girnar 5 ஆகிய ரகங்கள் கார்த்திகை பட்டத்திற்கு உகந்ததாகும். நிலக்கடலை பயிரில் உற்பத்தியை அதிகரித்து திரட்சியான காய்களைப் பெற ஒரு ஏக்கருக்கு 160 கிலோ ஜிப்சத்தை இருமுறை பிரித்து இட வேண்டும். முதல் 80 கிலோ ஜிப்சம் அடியுரமாகவும், பின்னர் 40-45-ம் நாளில் களையெடுப்பின் போது 80 கிலோ ஜிப்சமும் இட்டு பிறகு மண் அணைக்க வேண்டும்.

எள் சாகுபடியில் TMV 3, TMV 4, SVPR 1 போன்ற ரகங்கள் நாமக்கல் மாவட்டத்தில் பெரும்பாலும் பயிரிடப்பட்டு வருகின்றன. விதைகளின் தரம் நன்றாக இருந்தால் மட்டுமே அதிக மகசூல் பெற்று பயனடைய முடியும்.

ஆதலால் கார்த்திகைப் பட்டத்தில் பயிர் சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகள், விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள் விதைப்பிற்கு முன்னர் விதைப் பரிசோதனை செய்து விதையின் தரம் அறிந்து விதைப்பு செய்யலாம். தரமான நிலக்கடலை விதையில் குறைந்தபட்சம் 70% முளைப்புத்திறன், 96% புறத்தூய்மை, அதிகபட்சம் 9% ஈரப்பதம் இருத்தல் வேண்டும். எள் விதைகளுக்கு குறைந்தபட்சம் 80% முளைப்புத்திறன் இருத்தல் அவசியமாகும்.

விதையின் தரத்தை அறிந்து கொள்ள நாமக்கல் மாவட்ட ஆட்சியர் கூடுதல் வளாக கட்டிடத்தில் அறை எண்.13 இல் இயங்கி வரும் விதை பரிசோதனை நிலையத்தில் ஒரு மாதிரிக்கு ரூ.80/- கட்டணம் செலுத்தி விதையின் தரத்தை அறிந்து பயனடையலாம் என வேளாண்மை அலுவலர் செ.தேவிப்பிரியா தெரிவித்துள்ளனர்.



# அங்கக வேளாண்மை முறையில் பருத்தி சாகுபடி

**மண் வகை :** பல்வேறு வகையான மண் வகைகளில் பருத்தி பயிரிடப்பட்டாலும், நல்ல வடிகால் வசதியுள்ள தண்ணீர்த் தேங்காத இலேசான களிமண் மிகவும் ஏற்றது. அங்ககக் கரிமச்சத்தின் அளவு 0.5 சதவிகிதத்திற்கும் மேல் இருந்தால் பருத்தியை அங்கக முறையில் சாகுபடி செய்ய அம்மண்ணினைத் தேர்ந்தெடுக்கலாம். மண்ணின் கார அமிலத் தன்மை 6.0 - 6.5 இருந்தால் பருத்தி நன்றாக வளர்ந்து பலனைத் தரும்.

**இரகங்கள் :** சுரக்ஸா, சுனந்தா, சுராஜ், சுரபி, கோ 14, கோ 17, எஸ்விபிஆர் 2,4,6, கேசி 3, கே 12 (கருங்கன்னி), எம்சியு 5 மற்றும் எம்சியு 7 போன்றவை அங்கக முறையில் சாகுபடி செய்ய ஏற்ற பருத்தி இரகங்களாகும்.

**விதைப்புப் பருவம் :** குளிர்கால இறவையெனில் ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களும், கோடைகால தேவையெனில் பிப்ரவரி - மார்ச் மாதங்களும் பருத்தி விதைக்கச் சிறந்த பருவங்களாகும்.

**வயலைத் தயார் செய்தல் :** பருத்தி விதைப்பிற்கு இரண்டு மாதங்களுக்கு முன் பசுந்தாள் உரப்பயிர்களான சணப்பை அல்லது தக்கைப்பூண்டு இவற்றில் ஏதாவது ஒன்றை ஏக்கருக்கு 15 கிலோ வீதம் அடர்த்தியாக விதைத்துப் பூக்கும் பருவத்தில் ரோட்டோவேட்டர் கருவி கொண்டு துளாக்கி மண்ணில் கலந்து விடவும். இதனால் ஒரு ஏக்கருக்கு 7-10 டன் பசுந்தழைகளும், 20-25 கிலோ தழைச் சத்தும் கிடைக்கப்பெறும். 15-20 நாட்களுக்குள் பசுந்தழைகள் மக்கிவிடும். பின்னர் வயலினை டிராக்டர் கொண்டு உழுது பண்படுத்தி பார் அமைத்து விதைக்கப் பயன்படுத்தலாம்.

**அங்கக உரங்களை இடுதல் :** ஏக்கருக்கு 5 டன் நன்கு மக்கிய தொழுவுரம் அல்லது மண்புழு உரம் 2.5 டன் கடைசி உழவிற்கு முன் இட்டு மண்ணுடன் கலந்து விடவேண்டும்.

கடைசி உழவின் போது ஏக்கருக்கு ஒரு கிலோ வீதம் அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா, பொட்டாஷ் பாக்டீரியா, பிபிஎப்எம், பேசில்லஸ் சப்டில்லிஸ் மற்றும் டிரைக்கோடெர்மா விரிடி போன்றவற்றை 50 கிலோ நன்கு மக்கிய தொழுஉரம் அல்லது மண்புழு உரத்துடன் கலந்து விதைப்பிற்கு முன் வயலில் சீராக தூவவேண்டும் என சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வெ.விமலா தெரிவித்தார்.

# அயோத்தியாபட்டிணம் வட்டாரத்தில் வேளாண்மை இணை இயக்குனர் ஆய்வு



சேலம், நவ.25

சேலம் மாவட்டம், அயோத்தியாபட்டிணம் வட்டாரத்தில் ஆச்சாங் குட்டப்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள தங்கத்தாரகை உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் அமைந்துள்ள வித்யாசாகர் தோட்டத்தில் தமிழ்நாடு சிறுதானிய இயக்கத்தின் கீழ் சிறுதானியம் பதப்படுத்தும் மைய இயந்திரங்கள் தொகுப்பினை வேளாண்மை இணை இயக்குனர் கு.சீனிவாசன் சோதனை ஓட்டம் செய்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் கமலம் மற்றும் வேளாண் வணிகம் மற்றும் விற்பனை துறையின் வேளாண்மை துணை இயக்குனர் சுஜாதா, அயோத்தியபட்டினம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சண்முகப்பிரியா, வேளாண் வணிக வேளாண்மை அலுவலர் காயத்ரி, வேளாண்மை வணிக உதவி வேளாண்மை அலுவலர் கவி பாரதி ஆகியோர் உடன் இருந்தனர்.

மேட்டுப்பட்டி தாதனூர் கிராமத்தில் மக்காச்சோள படைப்புழு வயல்வெளி ஆய்வு செய்து, அதனை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து ஆலோசனை வழங்கினார். மேலும் செல்லிய–ம்பாளையம் கிராமத்தில் விதைப்பண்ணை வயல் அமைத்துள்ள ராமலிங்கம் வயலில் துவரை வல்லுனர் விதை பண்ணை வயல்வெளி ஆய்வு மேற்கொண்டார். இவ்வாய்வின்போது அயோத்தியபட்டினம் வட்டார விரிவாக்க மைய அதிகாரிகள் உடனிருந்தனர்.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333